அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2019–2020 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1,000 திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் வீதம் ரூ.10 கோடி நிதியுதவி மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள கிராம கோயில்களின் அன்றாட வழிபாடு தடையில்லாமல் நடைபெறுவதற்காக 2019–2020 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிதி வசதியில்லாத 1,000 கிராமப்புற திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணி செய்வதற்கு ஏதுவாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் வீதம் ரூ.10 கோடி நிதியுதவி என முத்தான 2 அறிவிப்புகளை விதி 110–ன்கீழ் அறிவித்த, அரவணைத்து தமிழ்நாட்டைக் காத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிவிப்புகள்

(அ) திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் திருவுருவப் படம் 19–7–2019 அன்று சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் திறந்து வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய விடுதலை போராட்ட வீரரும், உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பதவி வகித்தவரும், மேலவை, மக்களவை உறுப்பினராகப் பணியாற்றியவரும், சமுதாயத்தில் நலிந்த பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்காகவும், மேன்மைக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து சேவை புரிந்த பெருமகனாகவும் திகழ்ந்த திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய திருவுருவப் படத்தினை தமிழ்நாடு சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தலைமையிலே மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19–7–2019 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 5–30 மணிக்கு திறந்துவைக்க உள்ளார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியினை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விழாவிற்கான அழைப்பிதழ் இன்று*

அனுப்பப்பெறும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்காணும் விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு காங்கிரஸ் கட்சி சட்டமன்ற குழுத் தலைவர், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய அழைப்பாளர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு 20–7–2019 அன்று பிற்பகல் 4–30 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த அரசினர் சட்டமுன்வடிவுகள் மற்றும் ஏனைய அரசினர் அலுவல்கள் 20–7–2019 அன்று மானியக் கோரிக்கைகளின் விவாதம், பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு ஆகியவை பிற்பகல் 2–00 மணிக்கு முடிவுற்ற பின்னர் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நண்பகல் 12–00

6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*